பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 25 வியாழக்கிழமை (09-07-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 224

### வட தமிழீழத்தில் நடக்கும்

# தாக்குதல்களைக் கண்டித்து

# சென்னையில் ஆர்ப்பாட்டம்

## பாட்டாளி மக்கள் கட்சி தலைமையில் 20இல் நடக்கும்

சென்னை ஜூலை 9

ஈழத்தின் வடபகுதியில் ஸ்ரீலங்கா அரசுப்படைகள் நடத்தி வரும் தாக்குதல்களைக் கண்டித்து இம் மாதம் இருபதாம் திகதி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைமையில் இந்தியக் குடியரசுக் கட்சி, இந்திய மக்கள் முன்னணி மற்றும் எம். ஜி. ஆர். அ. இ. அ. தி. மு. க. ஆகிய கட்சிகள் சென்னையில் உள்ள ஸ்ரீலங்கா உதவித் தூதரகத்தின் முன்னால் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளன.

நான்கு கட்சிகளையும் சேர்ந்த லட்சக் கணக்கான தொண்டர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரை கைது செய்வதற்கு கட்டியங் கூறுவது போல தமிழக அரசு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் மட்டுமன்றி, இந்திய மண்ணில் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவோரும் தடைக்கு உட்படுவர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-10)

## வெற்றிலைக்கேணியில் மேலும் படைகள் இறக்கம்!

யாழ்ப்பாணம், ஜூலை 9

மேலும் பெரும் எண்ணிக்கையான படையினர் வெற்றிலைக்கேணிப் பகுதியில் கப்பல்களில் இருந்து இறக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் வாடியடிச் சந்தியில் தரித்து நிற்கும் படையினர் பாதுகாப்பு நிலைகளை பலப்படுத்துவதில் நேற்றும் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால் முன்னேறும் முயற்சி எதனையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. (இ-3)

## ஆரம்ப ஆசிரியர் பரீட்சை வினாத்தாள்கள் வந்தன

எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஆரம்ப ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்கான வினாத்தாள்கள், அனுமதி அட்டைகள், காகிதாதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் எடுத்த முயற்சியின் பலனாக அவை பலாலிக்கு நேற்று விமான மூலம் எடுத்து வரப்பட்டு, பின்னர் 'குமண' கப்பல் மூலமாக பருத்தித் துறைக்கு கொண்டு வரப்பட்டன.

நேற்று மாலை அவை யாழ்ப்பாணத்துக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளால் எடுத்து வரப்பட்டன.

கல்வி அலுவலகத்தில் வைத்து நாளை அனுமதி அட்டைகள் பரீட்சாத்திகளுக்கு வழங்கப்படும் என்றும் —

சில பரீட்சை நிலையங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் சரியான பரீட்சை நிலையங்கள் குறித்த விவரங்களை பெறுமாறும் — கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களை இன்று கல்வி அலுவலகத்தில் சமூகமளிக்குமாறு அவர் கோரியுள்ளார். (இ-3)

# செட்டிகுளம் - தந்திரிமலை பகுதியில் படை குவிப்பு

### மன்னார் நோக்கி நகர முயற்சி?

வவுனியாவில் இருந்து மன்னார் நோக்கி இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள பெரும் எண்ணிக்கையான படையினர் செட்டிகுளம், தந்திரிமலைப் பகுதிகளில் குவிக்கப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

செட்டிகுளம் பகுதியில் நெருக்கமாக காவலரண்கள் அமைக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்தப் பகுதியில் உள்ள காவலரண்களில் 20 காவலரண்கள் விடுதலைப் புலிகளின் சமீபகாலத் தாக்குதல்களால் தகர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## 18,841 குடும்பங்களுக்கு ம. எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

பதுக்கல் வர்த்தகர்களிடமிருந்து தமிழீழ காவல்துறையினரால் கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய், இரண்டு லீற்றர்கள் வீதம் 18,841 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பாக தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் விடுத்த அறிக்கை வருமாறு :-

தற்போதைய போர்க்கால சூழ்நிலையைச் சாட்டாக வைத்து, கொள்ளை இலாபம் பெறும் நோக்குடன் மக்களின் அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றான மண்ணெண்ணெயைப் பதுக்க முயன்ற வர்த்தகர்களிடம் இருந்து தமிழீழ காவல்துறையினர் பெருமளவு மண்ணெண்ணெயைக் கைப்பற்றி உள்ளனர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய் குடும்பம் ஒன்றுக்கு இரண்டு லீற்றர் வீதம் 18,841 குடும்பங்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# ராணுவத் தலைமைப் பீடத்தில் மீண்டும் பெரும் பிளவு?

### அரசுப் பத்திரிகை மூலம் அம்பலம்

கொழும்பு, ஜூலை 9

ஸ்ரீலங்காவின் இராணுவ தலைமைப் பீடத்தில் மீண்டும் பிளவு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ஒப்சேர்வர் நாளிதழில் வெளிவந்த ஒரு விமர்சனத்தின் மூலம் இது வெட்ட வெளிச்சமாகத் தெரிவதாக ஏ. எப். பி செய்தியாளர் தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்னாவின் தலைமையில் இராணுவம் தற்போது வெற்றிகளை குவித்து வருகிறது என்றும் —

இதனால் முப்படைகளையும் உள்ளடக்கிய கூட்டுப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளிடம் தமிழக அரசு காரணம் கேட்கிறது

சென்னை, ஜூலை 9

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஏன் தடை செய்யக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு அந்த இயக்கத்திடம் தமிழக அரசு கேட்டிருக்கிறது.

இவ்வருடம் மே மாதம் 14 ஆம் திகதி, இந்திய மத்திய அரசு, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்திருந்தது.

இப்போது அந்த இயக்கத்தின் மீது ஏன் தடை விதிக்கப்படக்கூடாது என்பதற்கான காரணங்களை முப்பது நாட்களுக்குள் அறிவிக்குமாறு நேற்று விடுத்த பகிரங்க அறிக்கை ஒன்றின் மூலம் தமி

[6 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழர் பிரச்சினை தீர்வுக்கு எந்த ஓர் அம்சமும் இல்லை

### தெரிவுக் குழுவின் திட்டம் குறித்து தொண்டா

"தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எந்த ஓர் அம்சமும் தெரிவுக் குழுவின் திட்டத்தில் (ஒப்பெக்ஸ்கவுன்சில்) இல்லை.

இப்படிக் கூறுகிறார் அமைச்சர் தொண்டமான்.

நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு அமைச்சர் தொண்டமான் கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ள சில அம்சங்கள் வருமாறு :-

★ "நாடாளுமன்றத் தெரிவுக் குழுவால் வெளியிடப்பட்டுள்ள ஒப்பெக்ஸ்கவுன்சில் திட்டம் முற்றிலும் துன்பகரமானதொன்று.

★ இந்தத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அம்சங்களை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிராகரிக்கின்றது என்று சொல்வதற்கு நான் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன்.

★ தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளும், அவற்றை தீர்ப்பதற்காக இ. தொ. க. வும், தமிழ்க் கட்சிகளும் முன்வைத்துள்ள யோசனைகளும் தெரிவுக் குழுவின் போக்கில் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை நான் இங்கு கசப்பாக முறையிட வேண்டியுள்ளது.

★ செங்கோல் ஆட்சி அழிந்துவிடுவது அரசியலை அடிக்கடி ஒரு முடிவுக் கட்டத்துக்கு கொண்டு செல்கிறது.

★ வடக்கு — கிழக்கை [illegible] நாட்டையே இரண்டாக [illegible] (இ-3)

## குமணவிலிருந்து பொருள் இறக்க அனுமதி

ஊரடங்கு அமுலில் உள்ள போதிலும், குமணகப்பலில் இருந்து பொருள்களை இறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக் கழக அனுமதி வெட்டுப்புள்ளி விவரம்

6 ஆம் பக்கத்தில்

## காத்துக் கொண்டிருப்போரும் காரணம் காட்டுவோரும்!

யாழ்ப்பாணம், ஜூலை 9

கொழும்பிலிருந்து 'குமண' கப்பலில் வந்த தபால்கள் இன்றைக்காவது எடுத்து வரப்படுமா? நாளைக்காவது விநியோகிக்கப்படுமா? - என்ற கேள்விகளே மிச்சமாக உள்ளன.

ஆம், ஏனைய பொருள்கள் நேற்றுக் கப்பலிலிருந்து இறக்கப்பட்ட போதிலும், தபால்களைப் பொறுப்பேற்று எடுத்து வருவதற்கு தபாற் பகுதி உத்தியோகத்தர்கள் நேற்று அங்கு செல்லவில்லை.

வழமையாகத் தபாற் பகுதியினர் செல்லும் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் வாகனம் இம்முறை கிடைக்கவில்லையாம்.

ஆனால் யாழ். செயலகம் வாகனம் ஒன்றைக் கொடுத்து தவ முன் வந்த போதிலும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினையில் வர்த்தகர் மூவர் தாக்கப்பட்டனர்!

## ரூ. 8 லட்சம் பணமும் சூறை!!

கொழும்பு, ஜூலை 9

ஸ்ரீலங்கா படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் நயினாதீவில் வைத்து மூன்று வர்த்தகர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர்; அவர்களிடமிருந்து எட்டு லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டது.

பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த சிலரே இந்த அடாவடித்தனத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

பொருள்களை வாங்கும் நோக்குடன், நயினாதீவிலிருந்து கொழும்புக்குச் செல்வதற்கு கடற்படையினரின் பாதுகாப்பைப் பெறுவதற்காக பணத்துடன் இவர்கள் முகாம் நோக்கிச் சென்றதாகவும்—

இடைவழியில் அவர்கள் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டனர் என்றும்—

பணமும் கொள்ளையடிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கொள்ளையில் பாதுகாப்புப் படையினர் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கருதப்படுவதால் இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைப்பது என பொலீஸ் தலைமையகம் தீர்மானித்திருக்கிறது என்றும் கூறப்பட்டது. [உ]

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஜூலை 9

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபை தொண்டர் ஸ்தாபனங்கள் உடனான கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இக் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு மாநகரசபை ஆணையாளர் பணிமனையில் நடைபெறும். [த-30 162]

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 9

'உதயன்'' ஆதரவுடன் யாழ். றோட்டறக்ட் கழகம் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — ஹொக்கிக் சுற்றுப் போட்டியில் முதல் சுற்று ஆட்டங்களின் கடைசி ஐந்து ஆட்டங்களும் இன்று நடைபெறுகின்றன.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் இன்றைய ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ காலை 6 15 மணி:- ஷபறா அணி எதிர் ஜொனியன்ஸ் அணி

★ காலை 7 மணி: கிறாஸ் கொப்பர்ஸ் அணி எதிர் பொற்பதி ஐக்கிய வி. க. அணி

★ பிற்பகல் 3 மணி;- சென் ஜோன்ஸ் கல்லூரி சிகப்பு அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் அணி

★ பிற்பகல் 3.30 மணி:- சென். ஜோன்ஸ் கல்லூரி கறுப்பு அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி

★ மாலை 4 மணி:- பல்கலைக்கழக நீல அணி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் அணி

இச்சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை காலை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும். [உ]

## சிப்பாய் பலி!

கொழும்பு, ஜூலை 9

திருமலை மாவட்டம் பாலம்போட்டாற்றுக்கும் குரங்குப் பாலத்துக்கும் இடையில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் அரச படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

இத் தாக்குதலில் 15 விடுதலைப் புலிகள் போராளிகள் பங்குபற்றினர் என்று 'லங்காபுவத்' தெரிவித்தது (இ-10)

## ஹெலியிலிருந்து பிரசுரம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாண நகரப் பகுதியிலும் அதனை அண்டியுள்ள சில பகுதிகளிலும் நேற்று ஹெலிக்கொப்டரிலிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன. விடுதலைப் புலிகளை விளித்து எழுதப்பட்ட கல்லச்சுப் பிரசுரம் ஒன்றே நேற்றுப் பல இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டன. (அ-162)

## கோவை மகேசனுக்கு அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

சுதந்திரன், சுடர் மற்றும் வீரவேங்கை ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியரான கோவை மகேசன் நினைவாக, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில், நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெறும்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ள இந்த நினைவஞ்சலிக் கூட்டத்துக்கு கழகத்தின் துணைப் பொறுப்பாளர் திரு. ஆ. தேவர் தலைமை வகிப்பார்.

விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. யோகரத்தினம் யோகி உட்பட பலர் அங்கு நினைவஞ்சலியுரை நிகழ்த்துவர். [ஓ]


## வைத்திய சேவை

நரம்புத் தளர்ச்சியா? வாதரோகமா, தலைமுடி உதிர்கிறதா? தலைமயிர் நரைக்கிறதா? குழந்தைகளின பிணியா? மாதர்களின் ரோகங்களா? தேக பருமனா? எதுவாயிருக்கட்டும் ஏன் தயக்கம் நாடுங்கள்! நலமடையுங்கள்!!

[ தினமும் காலை 8 மணி முதல் 12 மணி வரை ]

டாக்டர் த. சிவானந்தன்
D. A. M.' R. A. M. P. [Cey]
சிவா வைத்தியசாலை
384. கோவில் வீதி - நல்லூர் வடக்கு

கிளை: ஆனந்த மருத்துவநிலையம்
249, நாவலர் வீதி - யாழ்ப்பாணம்

[ தினமும் பி. ப. 2 மணி முதல் 6 மணி வரை ]

[21686]

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

வருடாந்த

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

காலம்: 1992 - 07 - 10 வெள்ளிக்கிழமை
பி. ப. 1 - 45 மணி

பிரதம விருந்தினர்:

திரு. க. சி. குகதாசன்
திருமதி அ. குகதாசன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

(இ-2560)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

சைவசித்தாந்தத்தில் வெளிவாரியாக பட்டப் படிப்பினை

மேற் கொள்வதற்கு யாழ். பல்கலைக்கழகத்தினால் அனுமதிகள் கோரப்பட்டுள்ளன.

இவ்விரிவுரையில் பங்குபற்ற விரும்புபவர்கள் 10 — 07 — 1992க்கு முன்னர் விவரங்களையும், நேர அட்டவணையையும் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி,
எஸ். அருள்நங்கை.

[சி-2903]

## யாழ் நாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அபிவிருத்திச் சபை மீளமைப்பு

மேற்குறித்த சபையின் மீளமைப்பு, கல்வி அமைச்சின் புதிய சுற்று நிருபத்துக்கு அமைவாக நடைபெறும். இதற்கான தெரிவுகளும் பொதுக் கூட்டமும் 26 07-92, பிற்பகல் 3-30 மணிக்கு, பாடசாலை மண்டபத்தில் நிகழவுள்ளன. இது குறித்த சகல விவரங்களும், பாடசாலை விளம்பரப் பலகையில் தரப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பெற்றோர்கள் - ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும், பாடசாலை நேரத்தில் அறிந்து கொள்வதோடு, உரிய நாளில் சமுகமளித்து ஆவன செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். நன்றி.

—அதிபர்

(5140)

## New Science Academy

Jaffna.

## 93 A/L

PHYSICS
திரு. கணேசன்
★ வெப்பவியல் (Heat)
Sat., Sun. 11-00—12-00

CHEMISTRY
திரு. மணியம்
★ சேதன இரசாயனம் (Organic)
பிரிவு I
Sat., Sun. 8-00—9-00
பிரிவு II
Sat., Sun. 4-30—5-30

ஆரம்பம்:
11-07-1992

(இ-2910)

## 1991 - ஏப்ரல் விசேட G. C. E.(A/L) பரீட்சை

மேற்படி பரீட்சைக்கு எமது பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவிகள் அனைவரையும் 10-07-1992 (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு பாடசாலைக்கு தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அதிபர்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

[இ/2912]

## இராமநாதன் கல்லூரி பரிசளிப்பு விழா

நிகழும் ஆனித்திங்கள் 26ஆம் நாள் 10-07-1992 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு இராமநாதன் கல்லூரிப் பரிசளிப்பு விழா, கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதம விருந்தினர்:

திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள்,
வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்.

சிறப்பு விருந்தினர்கள்:

திரு. இ. சிவானந்தன் அவர்கள்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
மருதனார்மடக் கோட்டம்.

சிவத்தமிழ்ச் செல்வி-
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்,
தலைவர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்.

பெற்றோர், பழைய மாணவிகள், அபிவிருத்திச் சங்கத்தினர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவிகள்.

சுன்னாகம்.
07-07-1992

[சி-2483]

## முக்கிய அறிவித்தல்

வட மாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்

1. கட்டடம்
2. நீர்ப்பாசனம்
3. நீர்வள வடிகால்
4. மின்சாரம் இலத்திரனியல்
5. வீதி அமைத்தல், திருத்தல்
6 உருக்குத் தளபாடம், உருவாக்கல்
7. மரத்தளபாடம்
8. காரியாலய உபகரணங்கள்

வட மாகாணத்தில் உள்ள திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / வங்கிகள் / மாநகரசபைகள் / நகர பிரதேச சபைகள் ஆகியவற்றில் காணப்படும் மேற்கண்ட வேலைகளை உள்ளடக்கிய சகல விதமான ஒப்பந்த வேலைகளையும் சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே மேற்கொள்ள முடியும் என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்றைய காலகட்டத்தில் மேற்கண்ட வேலைகளை மேற்கொள்ளும் நிலையில் உள்ளீர்களா எனத் தீர்மானிக்கும் பொருட்டு, சங்கத்தில் ஏற்கனவே பதிவு செய்துள்ளவர்களையும் இது வரை பதிவு செய்யாதவர்களையும் வருகின்ற 15 - 07 - 1992 க்கு முன் சங்கக் காரியாலயத்தில் தொடர்பு கொண்டு உங்கள் பெயர்களைப் பதியும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

மு. சி. சண்முகராசா,
கௌரவ செயலாளர்.

4/1, சம்பியன் வீதி,
கொக்குவில்.

[சி-2558]

## 31 ஆம் நாள் ஆத்ம சாந்தி அஞ்சலி

பிறப்பு: 09 — 05 — 1930



இறப்பு: 09 — 06 — 1992

## திருமதி பராசக்தி சதாசிவம்

திதி: 09 — 07 — 1992

நாட்கள் 31 சிட்டாகப் பறந்தாலும்
எங்கள் உளம் வேதனையில் மாறாது
தூண்டா மணி விளக்காய்,
ஒளி தந்த அன்புருவே!
உமக்காகப் பூ மாலை கட்டவில்லை
தினந்தினம் பாமாலை படிக்கின்றோம்
நின் ஆன்மா சாந்தி பெற.

- குடும்பத்தினர்.

பிரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்.

[21680]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிய எம் அருட் தந்தைக்கு

# பிரியாப் பெருவிழா

## புனித பத்திரிசியார் கல்லூரி அதிபராக 13 ஆண்டுகள் சேவை புரிந்த

## அருட் தந்தை பிரான்சிஸ் யோசப் அடிகளாரின்

# சேவை நலம் பாராட்டு



### நிதம் வேண்டி நிற்கின்றோம்

கடும்புயல் வீசுங்கால்
கடலுந்தான் கொந்தளிப்பில்
திடம்கொண்டு படகைநீர்
திசைமாற விட்டதுண்டோ?
பணிமுடித்து இளைப்பாறி
எமைவிட்டுப் பிரிந்திடினும்
பணிவுடன் இறையாசி
நிதம்வேண்டி நிற்கின்றோம்.

வணபிதா A. J பேனாட் அடிகள்,
அதிபர்.
புனித பத்திரிசியார் கல்லூரி.

### தந்தையே உம்மனித நேயம்

பார்புகழ வாழ்ந்து
பாவலர் அறிஞர்
பகுத்தறி பொறியியலாளர்
புதுமைகள் படைத்தோர்
மருத்துவம் கண்டோர்
மானுடம் உணர்ந்தோர்
ஆக
எத் திறத்தினரும்
எம் மதத்தினரும்
எந் நாட்டினரும்
எக் காலமும்
எடுத் தியம்பிய
எதிர்ப்பிலா உண்மையிது

குருத்துவ அழைப்பு- 1958
அதனூடு கல்லூரிப் பணியில்- 1959
அதிபராக- 1979 - 1992

பொறிவாயில் ஐந்தவித்து பொய்தீர் ஒழுக்க நெறி நின்றோன்
செருக்கும் சினமும் சிறுமையுமிலாப் பெருவாழ்வுடையோன்
அறன் அறிந்து மூத்த அறிவுடையோர் கேண்மை பெற்றோன்
தம்மிற் பெரியார் தமராதொழுகும் வன்மையுடை சான்றோன்
சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சாப் பெருமனமுடையோன்.

நானிலத்து எம் கல்லூரி புகழ் பெற
நாளெலாம் உழைத்த செம்மல்
மானிலத்து இறை பணியும் மன்பணியுமாற்றி
வாழ்க பல்லாண்டு வாழ்க வென்று.

பிரியாப் பெருவிடையளியா நிற்கும்
- புனித பத்திரிசிய கல்லூரிக் குடும்பத்தினர் -

(விளம்பர இல. ஹி-2556)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல அச்சகத்திற்கு அச்சுக் கோர்ப்பாளர்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை. தொடர்பு: 37, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். [4909]

இயந்திர இயக்குனர் வேலை தெரிந்தவர்களும், அச்சுக் கோர்க்கத் தெரிந்தவர்களும் நேரில் வரவும். வேதனம்: ரூ. 2,000 முதல் ரூ. 2,500 வரை. ஏ.எஸ்.ஜே. பிரின்ரிங் வேக்ஸ், மல்லாகம். (4910)

### இலவச திருமண சேவை

39 வயது, ஆயிலியம், செவ்வாய் 4, கவினில் தொழில் புரிபவருக்கு ஏற்ற மணமகள் தேவை. பெண்ணை அழைக்க ஒழுங்கு செய்யலாம். சந்திப்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [5132]

### துர்க்கா திருமண சேவை

இல. 116, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். 1992-07-01 தொடக்கம் ஆரம்பித்துள்ளது. திங்கள், புதன், ஞாயிறு ஆகிய நாட்களில் தொடர்பு கொள்ளலாம். குறிப்பு: படத்துடன் தொடர்பு கொள்ளவும். (4997)

### வினா - விடைகள்

க. பொ. த. உயர்தர/சாதாரண மாணவர்களுக்கு வழி காட்டியாக கடந்த கால கணக்கியல், வர்த்தக பரீட்சை வினா - விடைகள். ஆக்கியோன்: இ. செல்வநாயகம் (B.Com), றோயல் கல்லூரி ஆசிரியர். கிடைக்குமிடங்கள்; மண்டேலா றேடர்ஸ். யாழ்ப்பாணம்; S.K சாமி அன்கோ, நெல்லியடி. [21618]

### பரீட்சை A/L 92

A/L 92 ஆண்டு விஞ்ஞான மாணவர்களுக்கு முன் மாதிரிப் பரீட்சை; விண்ணப்ப முடிவு திகதி 09-07-1992. மேலும் விவரங்களுக்கு "A" Level Centre, 1 ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-2749]

### பொருளியல் வகுப்பு

G.C.E. (A/L) பொருளியல், பொருளியல் சிறப்பு பட்டதாரி ஆசிரியரினால் தனிப்பட்ட முறையில் வீடுகளில் கற்பிக்கப்படும். விவரங்களுக்கு: அகிலா கல்வி நிலையம், ஸ்ரேசன் சந்தி, யாழ்ப்பாணம். [21673]

### சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும், குடும்பப் பிரச்சினை, நோய், திராத கஷ்டம், வறுமை நீங்கவும், அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம். 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர். [21600]

### தட்டச்சு - றோணியோ

சகல விதமான தமிழ் — ஆங்கில தட்டச்சு, ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோணியோ வேலைகளை உங்கள் விருப்பம் போல் தரமான முறையில் செய்து கொள்ள நாடுங்கள் "அருண் மார்க்கெட்டிங் அன்ட் அட்வேடைசிங் சேவிசஸ்", இல. 15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-2909)

## தெற்கில் கடும் மழை!

கொழும்பு ஜூலை 9

தெற்குப் பகுதியில நேற்று முன்தினம் கடும் காற்றுடன் கடும் மழை பெய்ததாக அறிவிக்கப்படுகிறது. ஹினிதுமவில் மணிக்கு 40 மைல் வேகத்தில் அடித்த மினிப் புயலில் அந்தப் பகுதியில கடும் சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கான மரங்கள் முறிந்து விழுந்தன என்றும் பத்துக்கு மேற்பட்ட வீடுகள் இடிந்து வீழ்ந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-த)

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து சட்ட மருத்துவத்துறையில் பேராசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1992-09-30 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத் திட்டம்:-

பேராசிரியர் தரம் II ரூபா 12,200 — 6x300 — 14,000/- (மாதமொன்றுக்கு)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் இப்பல்கலைக் கழகத் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர், விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23x10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு:- ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்

– பதிவாளர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-07-07.

[சி/2557]

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் ஆங்கிரச ஆண்டு ஆனித்திங்கள் 27 ஆம் நாள் (11-07-1992) சனிக்கிழமை காலை 06-28 லிருந்து 08-24 வரையுள்ள சுபவேளையில்,

திரு. சி. செல்லையா (பலாலி) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் திருநிறை செல்வன்
**சிவசுப்பிரமணியம்**
(லங்கா சிமெந்து லிமிட்.) அவர்களுக்கும்

எமது ஏக புத்திரி திருநிறை செல்வி
**விக்னேஸ்வரி**
(ஆசிரியை, ஒட்டுசுட்டான் ம. வி.) அவர்களுக்கும்

திருவருளை முன்னிட்டு கைதடி மேற்கு இடுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோவிலில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து, மணமக்களை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: 13-07-1992, பிற்பகல் 4-00 மணி [திங்கள்] மணமகன் இல்லம்

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. இ. இரத்தினசிங்கம் குடும்பத்தினர்,
திரு. க. சேனாதிராஜா குடும்பத்தினர்,
அரசினர் ஆஸ்பத்திரி அருகாமை,
பிரதான வீதி,
அச்சுவேலி.

திரு. சி. சிவசுப்பிரமணியம் குடும்பத்தினர்,
திருமதி கு. அன்னம்மா,
"அன்ன வாசா",
இடுங்கித் தோட்டம்,
கைதடி மேற்கு,
கைதடி.

[5139]

# ஈராண்டு நினைவஞ்சலி



உதயம்: 06 — 04 — 1954

அஸ்தமனம்: 09 — 07 — 1990

## அமரர் வீரவாகு யோகநாதன்

(கிளை முகாமையாளர், வவுனியா தெற்கு-தமிழ்ப் பிரிவு ப. நோ. கூட்டுறவுச் சங்கம்)

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமது பிரிவால் துன்புறும்:
மனைவி, மக்கள், அம்மா,
சகோதர, சகோதரிகள், அத்தான்மார்,
அண்ணிமார், மருமக்கள், மற்றும்
உற்றார், உறவினர்கள்.

"வீரவாகு இல்லம்",
குடியிருப்பு,
வவுனியா.

(5126)

# நெஞ்சங்களின் நினைவுகளில் 3 ஆம் ஆண்டு



## அமரர் இராமலிங்கம் கந்தையா

(இளைப்பாறிய வ. பி. போ. ச. சாலைப் பரிசோதகர், கோண்டாவில்)

மண்ணில்: 30 — 11 — 1927

விண்ணில்: 13 — 07 — 1989

திதி: 09 — 07 — 1992

எங்கு பார்த்தாலும் உங்கள் உருவம்
எங்கு போனாலும் உங்கள் காட்சி
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி க. திருஞானசக்தி [அன்பு மனைவி],
க. மோகனதாஸ் [அருமை மகன்],
க. மோகனரஞ்சி [அருமை மகள்].

"மோகன பவனம்"
பன்னாலை, தெல்லிப்பழை.

[21676]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கண்டிப்பால் பயன் கிட்டுமா?

1990 ஜூன் மாதத்தில் யுத்தம் தொடங்கிய பின்னர் கிழக்கு மாகாணத்தில் இராணுவத் தாக்குதல்கள் ஒருபுறமிருக்க, இன வன்செயல்கள் அடிக்கடி நடைபெற்று வருவது எல்லோரும் அறிந்ததே. குறிப்பாக முஸ்லிம் ஆயுதக் குழுக்கள், அரசாங்கப் படைகளின் ஆசியுடன், ஏன் அவற்றின் தூண்டுதலின் பேரிலுங்கூட, தமிழ் மக்களைக் கொல்லும் சம்பவங்களிலும், கொள்ளையடித்தல், தீயிடுதல் போன்ற ஏனைய வன்செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றன.

இவ் விடயம் சர்வதேச மன்னிப்புச் சபையின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. கிழக்கில் முஸ்லிம்களுக்கு அரசு ஆயுதங்கள் வழங்குவது குறித்து கடந்த வருடமே மன்னிப்புச்சபை கவலை தெரிவித்திருந்தது. அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தவில்லை. பொலன்னறுவை மாவட்டம் முத்துக்கல், கரப்பொல, அழிஞ்சிப்பொத்தானை ஆகிய கிராமங்களில் பெரும் இனப்படுகொலைகள் நடந்தன. அவற்றைக் கருத்தில் எடுத்துக் கொண்டு மன்னிப்புச் சபை அரசாங்கத்தை இப்போது கண்டித்திருக்கிறது.

ஜே. ஆரின் பதவிக் காலத்திலேயே கிழக்கில் முஸ்லிம் ஊர்க்காவற்படை உருவாக்கப்பட்டாயிற்று. தமிழர்களையும், முஸ்லிம்களையும் மோதவிட்டு அவர்களின் ஒற்றுமையைக் குலைத்துவிடுவதற்காகவே அது உண்டாக்கப்பட்டது. கிழக்கில் தமிழ்-முஸ்லிம் உறவு பலமானதாக இருந்தால் இரு சாராரின் உரிமைகளையும் கொடுத்தாக வேண்டி ஏற்படலாம். இருவரையும் மோதவிட்டுப் பிரித்துவிட்டால் தமிழர் பக்கத்தைப் பலவீனப்படுத்தலாம். முஸ்லிம்களையும் ஏய்க்காட்டலாம் என்று திட்டமிட்டார்.

அது மட்டுமல்ல இரண்டு சிறுபான்மை இனங்களையும் மோதவிட்டால் அவர்களே அழிவார்கள் என்பதால் எல்லா வகைகளாலும் சிங்களவர்களுக்கே லாபம் என்பதையும் ஜே. ஆர். அறிந்திருந்தார். அவர்கள் இரு சாராரையும் மோதவிடுவதால் தமிழர் தரப்புக்கு உரிமை வழங்குவதை எதிர்ப்பவர்களில் முஸ்லிம்களே முதலானவர்களாக இருப்பர் என்றும் அவர் சரியாகக் கணக்குப் போட்டார்.

அந்தக் கணக்குச் சரி என்பதைக் கண்டுகொண்ட பிரேமா, முஸ்லிம்கள் மத்தியில் ஆயுதக் குழுக்களின் எண்ணிக்கையை அதிகரித்தார். சட்டபூர்வமானது, சட்டபூர்வமில்லாதவை என்று பல குழுக்கள் உண்டாகின. வெளியால் தெரிவது ஒன்று; உள்ளே ஒழிந்திருப்பவை பல என்று பல்கிப் பெருகின.

முஸ்லிம்களையும் தமிழர்களையும் மோதவிடுவதன் மூலம், கிழக்கில் சிங்களவர் நலன்களை மேலோங்கச் செய்யலாம். அங்கு எப்போதும் ஒரு குழப்பமான அரசியல் பின்னணியை நிலைகொள்ளச் செய்யலாம் - என்பன கூட அரசின் சூழ்ச்சி நிறைந்த உள் நோக்கங்களில் அடங்கும்.

இவ்வாறான சூழ்ச்சித் திட்டங்களை அகத்தே கொண்டிருக்கும் அரசு, மன்னிப்புச் சபை கண்டிக்கிறது என்பதற்காக, சட்டபூர்வமானதும் சட்ட விரோதமானவையுமான முஸ்லிம் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களையும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதில் தான் அரசுக்கு முழு அக்கறையும். அதன் மூலமே தமிழர்களை அடிமைப்படுத்தும் தீர்வு ஒன்றை திணிக்க முடியும். முஸ்லிம் குழுக்களை நிராயுதபாணிகள் ஆக்கிவிட்டால், தமிழர் மீது, தான் நினைத்த ஒவ்வாத தீர்வு ஒன்றைத் திணிக்கும் தனது முயற்சி பலவீனமடையும் என்று கூட அது சிந்திக்கலாம்.

எனவே மன்னிப்புச் சபை தனது கடமைக்கு அரசைக் கண்டிக்க வேண்டியது தான். அரசோ அதனைப் பொருட்படுத்தாமல் தான் நினைத்தவாறு நடக்கும். இதுவே நடைமுறையாக அமையும்!

# படையினரின் பீரங்கி அணியை எதிர்க்க புலிகளின் விசேட கொமாண்டோக்கள்

## களத்தில் அவர்களின் புதிய யுக்தி

கொழும்பு, ஜூலை 9

பலவேகய - 2 இராணுவ நடவடிக்கையில் ஆயுதப் படையினரின் கவச பீரங்கி அணியை எதிர்த்துச் சண்டையிடுவதற்கு விடுதலைப் புலிகள் விசேட பீரங்கி எதிர்ப்புப் பயிற்சி பெற்ற கொமாண்டோ பிரிவுகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இராணுவ கவச அணியினர் பயன்படுத்தும் பிரதான யுத்த டாங்கிகளான சீனத் தயாரிப்பு - ரி 55 டாங்கிகளை அழிப்பதே விடுதலைப் புலிக் கொமாண்டோ பிரிவுகளின் இலட்சியம் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களை ஆதாரங்காட்டி 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

வெற்றிலைக்கேணிப் பிரதேசத்தில் உள்ள பெரிய பச்சிலைப்பள்ளிப் பகுதியில் விடுதலைப் புலிகள் சீன டாங்கிகளுக்கு எதிராக 66 மில்லிமீற்றர் விமான எதிர்ப்பு லோஞ்சர்களைப் பாவித்தனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தமுறையில் டாங்கிகளையும் துருப்புக்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களையும் அழிப்பதன் மூலம் இராணுவ நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளிலே விடுதலைப் புலிகள் நாட்டம் காட்டி வருகின்றனர் என்றும்—

பலவேகய இராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததில் இருந்து குறைந்தது இரண்டு சீன டாங்கிகள் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் மிக மோசமாகச் சேதமடைந்தன என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## சகடை வீழ்த்தப்பட்ட பின் கொழும்பில் வந்த செய்திகள்

### பலியான படையினர் 19 பேரின் விவரங்கள்

சகடை விமானத் தகர்ப்புச் சம்பவத்தில் உயிரிழந்த விமானப் படையினரின் பெயர்கள் வருமாறு:-

ஸ்குவாட்ரன் லீடர் டி.எப். காசீர் (தலைமை விமானி)

பிளைட் லெப்டினன்ட்கள்: ஏ. பி. டபிள்யு. பெர்னாண்டோ, பி.எஸ்.பி. மென்டிஸ்.

பிளையிங் அதிகாரிகள்: எம். வி. கே. பி. எச். விஜேகோன், என்.ஜே. பிரேமரத்னா. ஆர்.ஆர்.எம்.எஸ். ரத்னாயக்கா, சார்ஜண்ட் சில்வா.

விமானப்படைச் சிப்பாய்கள்: எல்.எம்.எல் கே. பெர்னாண்டோ, எச். பி. டி. ஏ. ஆரியவன்ஸா, பி.வி சி.பி. ஜயவீரா, எச்.ஏ.கே. பாலித்த. ஆர்.எம். பிரேமரத்னா. ஆர்.எம். திலகசிரி பண்டா, பி.பி. லியனகே, எச்.என்.பி. ஹப்புதந்திரி, ஹீனடிக்கும்புற, எச்.ஆர். அமரரத்னா, டி.கே வை.ஏ. ரஞ்சித், பி.பி.எஸ்.டபிள்யு. பீரிஸ்.

பிளைட் லெப்டினன்ட் பிரியந்தா பெர்னாண்டோ முன்னாள் விமானப்படைத் தளபதியும், தற்போது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சுச் செயலாளருமான திரு. வால்டர் பெர்னாண்டோவின் புதல்வன் ஆவார்.

யுத்தத்தில் உயிரிழந்த விமானப்படையின் முதலாவது உயரதிகாரி ஸ்குவாட்ரன் லீடர் காசீர் ஆவார். [ஒ-எ-த]

### ரூ. 15 கோடி பெறுமதி!

கொழும்பு, ஜூலை 9

இயக்கச்சிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட வை -8 ரக விமானத்தின் பெறுமதி சுமார் 15 கோடி ரூபா என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மணிக்கு 317 மைல் வேகத்தில் பறக்கக் கூடிய இந்த வை - 8 ரக விமானம் சுமார் 150 பேரை இலகுவாக ஏற்றிச் செல்லக்கூடியது என்றும்—

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரிடம் இருந்த ஒரே ஒரு பெரிய சரக்கு இராணுவ விமானம் இதுவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானையில் இருந்து ஜீப் வண்டிகளை இந்த விமானமே பலாலி, திருமலை ஆகிய இடங்களுக்கு எடுத்துச் செல்ல இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்தது என்றும் கூறப்படுகிறது.

### உட்சதி அல்லவாம்

கொழும்பு, ஜூலை 9

சீன வை-8 விமானம் வெடித்துச் சிதறிய சம்பவத்துக்கு உட்சதிச் செயல் காரணமல்ல.

சிரேஷ்ட பாதுகாப்பு வட்டாரம் இச் சாத்தியத்தை நிராகரித்து விட்டதாக ''த ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இவ் விமானத் தகர்ப்புச் சம்பவம் ஸ்ரீலங்கா விமானப் படைச் சரித்திரத்திலேயே மிக மோசமானது என்று சிரேஷ்ட பாதுகாப்பு வட்டாரங்கள் வர்ணித்ததாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-எ)

### 'ரடார்' திரையிலிருந்து திடீரென மறைந்தது!

சீனச்சகடை விமானம் ஆனையிறவுக்கு மேலாக பறந்து கொண்டிருந்த போது திடீரெனக் காணாமற் போய் விட்டது. 'ரடார்' திரையிலிருந்து இவ் விமானம் திடீரென மறைந்தமை பெரும் மர்மத்திற்குரியது.

கூட்டுப் படைத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

விமானம் காணாமற் போவதற்கு முன் விமானியிடம் இருந்து எவ்வித அவசர அழைப்பும் வரவில்லை. அதாவது எந்தவித அபாய அறிவிப்பையும் 'ராடர்' கருவிக்கு அனுப்பி வைக்க முடியாத நிலையில் விமானிகள் இருந்துள்ளனர்.

இவ்வாறு அவர் மேலும் சொன்னார். [ஒ-த]

### ஒரு சூடே விமானத்தை துளைத்திருக்க முடியும்!

#### முன்னாள் தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 9

துப்பாக்கிச் சூடு ஒன்று கூட விமானத்தைத் துளைத்திருக்கக் கூடும். வெடிமருந்து மற்றும் ஆயுதங்களை ஏற்றிச் செல்லும் விமானம் ஓர் அசல் ''ரைம்பொம்'' தான. அதை வெடிக்க வைக்க சிறு தாக்கம் ஒன்றே போதும்.

ஓய்வுபெற்ற விமானப் படைத் தளபதியான எயர் வைஸ் மார்ஷல் ஹரிகுண திலக்க ராய்ட்டருக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதனிடையில் ... தரையில் வீழ்ந்த பின்னரே விமானம் வெடித்ததாக இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் நடுவானில் விமானம் வெடித்து நிலத்தில் வீழ்ந்தது என்று தனக்கு தகவல்கள் கிடைத்திருப்பதாக சிரேஷ்ட இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வமாக இராணுவம் இதை ஒப்புக் கொள்ளும் என நான் நினைக்கவில்லை என்று தனது பெயரைக் குறிப்பிட ... கூறினார். [ஒ]

## உயர்நிலை நீதிமன்றம் விசாரணை நடத்தும்

சீன வை - 8 ரக விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரிக்க உயர்நிலை விசாரணை நீதிமன்றம் ஒன்றை விமானப் படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தனா நியமித்துள்ளார்;

இந்த நீதிமன்றத்தில் எயர் கொமடோர் ஒருவரும் இரண்டு விங் கொமாண்டர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

சுட்டு வீழ்த்தப்பட்ட சீன விமானம் வெடித்துச் சிதறுவதற்கு முன்னர் 6 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து பலாலி விமானக் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொண்டிருந்தது என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த விமானம், வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கைக்குத் தேவையான அவசர யுத்த தளபாடங்கள் மற்றும், வெடிமருந்துகளை ஏற்றிக் கொண்டு சென்ற போதே சுட்டு வீழ்த்தப்பட்டது என்றும் அந்தச் சமயம் விமானத்தில பத்துத் தொன் பொருள்கள் இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## நரசிம்மராவின் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை: அடுத்த வாரம் விவாதம்

புதுடில்லி, ஜூலை 9

இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடுத்த வாரத்தில்— எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் லோகசபை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும் என்று அறிவிக்கப்படுகிறது.

பாரதீய ஜனதாக் கட்சியின் திரு ஜஸ்வன்சிங் பிரேரணையைக் கொண்டு வந்தார். பாரதீய ஜனதாக் கட்சி, தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த ஐம்பதுக்கும் அதிகமான உறுப்பினர்கள் அதற்கு ஆதரவு தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து லோகசபை சபாநாயகர் சிவராஜ் பட்டீல் விவாதத் திகதியை அறிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக தமக்கு 26 அறிவித்தல்கள் கிடைத்திருப்பதாகவும் முதலில் ஜஸ்வன்சிங்கின் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-த)

## ராஜீவ் கொலை வழக்கு: இரகசிய விசாரணைக்கு எதிராக மனுத் தாக்கல்

சென்னை, ஜூலை 9

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை இரகசியமாக நடத்தப்பட வேண்டும் என்றும், விசாரணைகளுடன் சம்பந்தப்பட்ட தகவல்களை வழக்குடன் தொடர்புடைய எவரும் வெளியிடக்கூடாது என்றும்— சென்னை நீதிமன்றம் விடுத்த அறிவுறுத்தலை ஆட்சேபித்து மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ரங்கன் என்ற சந்தேக நபரே இந்த ஆட்சேப மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

நீதிமன்ற அறிவுறுத்தலின்படி வழக்கறிஞர்கள் வழக்குத் தொடர்பான விவரங்களை நீதிமன்றத்துக்கு வெளியே தெரிவிக்கக் கூடாது என்று தடுக்கப்பட்டுள்ளனர்.

பத்திரிகைகளும் நீதிமன்ற விசாரணை தொடர்பாக எதுவும் பிரசுரிக்கக் கூடாது என்று தடுக்கப்பட்டுள்ளன. இது வழக்கறிஞர்களினதும், பத்திரிகைகளினதும் உரிமையை மீறும் செயலாகும் என்று ரங்கன் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். [ஒ-த]

## தபால் ஊழியருக்கு மேலதிக கொடுப்பனவு

கொழும்பு ஜூலை 9

தபால் ஊழியர்களுக்கு ஜூலை மாதம் தொடக்கம் சனிக்கிழமை வேலைக்கு மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இந்தக் கொடுப்பனவு ஒரு நாள் சம்பளத்துக்குச் சமமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [த]

## வெளியேறியவர்கள் மீண்டும் கட்சியில் சேரலாம்!

### ஜனாதிபதி பிரேமா அழைப்பு

கொழும்பு, ஜூலை 9

ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் கட்சியில் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனாதிபதி பிரேமதாஸா திவுலப்பிட்டிய மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

திரு. பிரேமதாஸா மேலும் சொன்னதாவது;

எமது கட்சியில் இருந்து வெளியேறிய ஒருவர் தமது மனைவியுடன் இக் கூட்டம் நடைபெறும் இடத்தில் இருந்து சற்றுத் தொலைவில் மரம் ஒன்றின் நிழலில் நின்றவண்ணம் எனது பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறார் என அறிகின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் சேருபவர்கள், இக் கட்சியின் பெருமைகளையும் கொள்கைகளையும் ஏற்றுச் செயல்படுவோம் என்ற உறுதியுடன் வரவேண்டும் — என்றார். [ஒ-எ]

## முஸ்லிம் காங்கிரஸுடன் தமிழ் கட்சிகள் பேச்சு

கொழும்பு, ஜூலை 9

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு 4 அம்சத் திட்டத்தை சமர்ப்பித்துள்ள 7 தமிழ்க் கட்சிகளும் அது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப்பீடத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியதாக அறிவிக்கப் படுகிறது.

அதேசமயம் தமிழ்க்கட்சிகளின் 4 அம்சத் திட்டத்தை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே நிராகரித்து விட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக் கழக அனுமதி வெட்டுப்புள்ளி

| மாவட்டம் | பரீட்சை இல | பொறியியல் I | பொறியியல் II | மருத்துவம் | பல் வைத்தியம் | மிருக வைத்தியம் | விவசாயம் | உயிரியல் விஞ்ஞானம் | பௌதிக விஞ்ஞானம் | கலை | சட்டம் | முகாமை | வர்த்தகம் | தரக்கட்டுப்பாட்டு ஆராய்வு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1 | | | | | | | | | 254 | | | | |
| | 2 | 290 | 285 | 271 | 269 | 264 | 255 | 243 | 235 | 246 | 267 | 292 | 277 | 281 |
| கிளிநொச்சி | 1 | | | | | | | | | | | | | |
| | 2 | 285 | 283 | 211 | 207 | 188 | 189 | 182 | 183 | 246 | 237 | 261 | 257 | |
| முல்லைத்தீவு | 1 | | | | | | | | | | | | | |
| | 2 | 262 | 254 | 238 | 213 | 194 | 193 | 182 | 183 | 246 | | 265 | 253 | 234 |
| மன்னார் | 1 | | | | | | | | | 259 | | | | |
| | 2 | 189 | 184 | 198 | 196 | 190 | 186 | 181 | | 232 | 226 | 254 | 240 | |
| வவுனியா | 1 | | | | | | | | | 246 | | | | |
| | 2 | 188 | | 196 | 194 | 190 | 189 | 180 | 237 | 238 | 231 | 277 | 259 | |
| திருகோணமலை | 1 | 226 | | 234 | | | 198 | 189 | 194 | 225 | 237 | 256 | 241 | |
| | 2 | 263 | 256 | 235 | 229 | 227 | 215 | 195 | 202 | 224 | 261 | 275 | 258 | 233 |
| மட்டக்களப்பு | 1 | | | 262 | | | | 198 | 185 | 255 | | 261 | 259 | |
| | 2 | 255 | 251 | 258 | 254 | 250 | 236 | 220 | 187 | 246 | 259 | 286 | 267 | 244 |
| கொழும்பு | 1 | 263 | 254 | 272 | 268 | 264 | 251 | 238 | 204 | 235 | 272 | 278 | 260 | 248 |
| | 2 | | | | | | | | | | | | | |

★ பரீட்சை 1 - 1990 ஆகஸ்டில் நடைபெற்றது.

★ பரீட்சை 2 - 1991 ஏப்ரலில் விசேடமாக நடாத்தப்பட்டது.

## விமானத்தின் மற்றும் பல பாகங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட ''வை-8'' ரக விமானத்தின் மற்றும் பல பாகங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இவை நேற்று வானம் ஒன்றில் மக்கள் பார்வைக்காகக் கொண்டு செல்லப்பட்டன. [இ-162-111]

## ரூ. 85 லட்சம் பெறுமதியான ஹெரோயின் மீட்பு

கொழும்பு, ஜூலை 9

சிலாபம் மாரவிலை பகுதியில் சைக்கிளில் சென்ற நபர் ஒருவரிடம் இருந்து 85 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினை பொலீஸார் கைப்பற்றினர்.

இதேசமயம் —

கடந்த வாரம் இப் பகுதியில் உள்ள விகாரை ஒன்றிலிருந்து நாற்பது லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. [உ]

## 18,841 குடும்பங்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களால் தரப்படும் தகவல்களின் அடிப்படையில் தொடர்ந்தும் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளில் தமிழீழ காவல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். சமூக நலன் கருதி எடுக்கப்படும் இந் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கி வரும் சகல பொதுமக்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதே சமயம் ஒருசில வர்த்தகர்கள் தாமாகவே முன்வந்து காவல்துறையின் உதவியுடன் மண்எண்ணெயைப் பொதுமக்களுக்கு விநியோகிக்க முன்வந்திருப்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் எதையும் எதுவிதத் தயக்கமுமின்றி விநியோகிக்குமாறு சகல வர்த்தகர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## புலிகளிடம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூக அரசு கேட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள விடுதலைப் புலிகளின் தலைமைப் பணிமனைக்கும், லண்டனிலுள்ள அதன் அனைத்துலகச் செயலகத்துக்கும், லண்டனில் வாழ்ந்து வரும் விடுதலைப் புலிகள் பொறுப்பாளர்களில் ஒருவரான கே. ஆர். சேகருக்கும் அந்த அறிவித்தல் அனுப்பப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [அ-10]

# கிழக்கு மாகாண எல்லைகள் மீள நிர்ணயிக்கப்பட வேண்டும்

## தமிழ்க் கட்சிகளிடம் லலித்

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான பிரச்சினையை மீளாய்வு செய்வதற்கு கிழக்கு மாகாண எல்லைகளை மீள நிர்ணயிப்பது முக்கிய அம்சமாக உள்ளது.

தம்மைச் சந்தித்த ஏழு தமிழ்க் கட்சிகளின் தூதுக் குழுவிடம் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உப தலைவரும் முன்னாள் அமைச்சருமான லலித் அத்துலத் முதலி முன்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரமும் திரு. அத்துலத் முதலியைச் சந்திக்கச் சென்றிருந்தார்.

தமிழ்த் தூதுக்குழுவிடம் திரு. அத்துலத்முதலி சொன்னதாவது:

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய எல்லைகள் குறித்து எனது கட்சி திருப்தியடையவில்லை.

குடியேற்ற காலத்து எஜமானர்கள் தங்களின் விருப்பத்துக்கு ஏற்றவாறு கிழக்கு மாகாண எல்லைகளை உருவாக்கினார்கள். இப்போதைய நிலைவரம் வேறாக உள்ளது. இப்போது இனங்களும் அவற்றின் தனித்துவங்களும் அங்கீகரிக்கப்படக் கூடியதாக கிழக்கு மாகாணத்தின் எல்லைகள் புதிதாக மீள் நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

தாம் வாழும் பிரதேசங்கள் தமிழர் வாழும் பிரதேசங்களுடன் இணைக்கப்படுவது குறித்து தீர்மானிக்க சிங்களவர்களும் முஸ்லிம்களும் அனுமதிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அத்துலத்முதலி தெரிவித்தார். [இ-எ]

## கிராம சேவையாளர் பரீட்சை ஆகஸ்டில்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ் மாவட்டத்தில் கடந்த மாதம் 13 ஆம் திகதி நடைபெறாத கிராம சேவையாளர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கிறது.

அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் ஜி. சீ. ஈ. [உயர்தர] பரீட்சையின் போது இப்பரீட்சையும் நடைபெறும். என்று கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். [இ-3-162]

## ராணுவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படைகளின் தளபதியான ஹமில்டன் வனசிங்கா மற்றும் பாதுகாப்புச் அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா ஆகியோர் தேவைதானா என்றும் 'ஒப்சேர்வர்' கேள்வி எழுப்பியிருக்கிறது.

இராணுவத் தளபதி வைத்தியரத்னாவின் திறமையையும் இப்பத்திரிகை வெகுவாகப் பாராட்டியுள்ளது என்றும் வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. [இ-எ]

## காத்துக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தபாற் பகுதியினர் நிதி தொடர்பான காரணம் ஒன்றைக் கூறி அந்த வாகனத்தைப் பயன் பயன்படுத்தவில்லை என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அதிகாரிகள் காரணம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பாவம் மக்கள் தங்கள் [illegible] போது [illegible] என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். [அ-3]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான காலஞ்சென்ற கார்த்திகேசு இராசரத்தினத்தின் [Retired Shroff, Customs, Colombo] அன்பு மனைவி மகேஸ்வரி 8 - 7 - 92 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னார் விஜயநாதன் [Colombo] மகேந்திரன் [Germany], இந்திராதேவி, வசந்தாதேவி [U. S. A.] ஆகியோரின் அன்புத் தாயாரும், டொறின் [U. S. A.], கமலா [Germany] டாக்டர் தனபாலசிங்கம், பேரின்பநாதன் [U. S. A.] ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை [9 - 7 - 92] 179/4, பிறவுண் வீதி யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள். ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
இந்திராதேவி தனபாலசிங்கம்
[மகள்]

179/4 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [21685]

## இரத்தினசபாபதி மகேஸ்வரசர்மா

### (கோவை மகேசன்)

கோப்பாய் தெற்கு காலஞ்சென்ற இரத்தினசபாபதிக் குருக்களின் சிரேஷ்ட புதல்வனும், மயிலணி சிவகடாட்சக் குருக்களின் மருமகனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும் ஆகிய மகேஸ்வரசர்மா (கோவை மகேசன்) 4-7-92 சனிக்கிழமை சென்னையில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் சென்னையில் நடைபெற்றன. ஏனைய கிரியைகள் கோப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோ. இ பிரணதார்த்திஹரக்குருக்கள்
(சகோதரன்)

வீரபத்திரர் கோவில்,
கோப்பாய் (21677)

## வ. சண்முகேஸ்வரன் [குஜன்]

அராலியைச் சேர்ந்த சித்தங்கேணி வல்லபேஸ்வரக்குருக்கள் தம்பதிகளின் புதல்வன் சண்முகேஸ்வரன் (குஜன்) 7. 7. 1992 செவ்வாய் இரவு காலமானார். அவரின் ஆத்ம சாந்தி கிரியைகள் அராலி சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் வீதி இல்லத்தில் நேற்று காலை 10 மணிக்கு நடை பெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலசுப்பிரமணியக்குருக்கள்
[சகலன்]

(21689)

## கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் 22ஆவது ஆண்டு விழா

ஆண்டு விழாவை முன்னிட்டு பின்வரும் சுற்றுப் போட்டிகள் யாழ். மாவட்ட ரீதியில் நடாத்தப்பட உள்ளன.

மென்பந்து கிரிக்கட் [11 பேர் — 20 ஓவர்]
கரபந்தாட்டம் [ 6 பேர் — ஓவர்கேம் ]
கரபந்தாட்டம் [ 6 பேர் — செற்அப் ]

அனுமதிக் கட்டணம் 50/-

விண்ணப்ப முடிவு திகதி: 15 — 07 — 1992

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ப. ஜெயக்குமார்,
27, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

[21683]

# மரண அறிவித்தல்

## திரு. கார்த்திகேசு இரத்தினசபாபதி

திரு. கார்த்திகேசு இரத்தினசபாபதி [உரிமையாளர், இரத்தினசபாபதி அன் சன்ஸ், மருந்துக்கடை, 131, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்] காலமாகிவிட்டார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி கமலாதேவி இராஜேஸ்வரன் [ஆசிரியை, [யா/செங்குந்தா இந்துக் கல்லூரி], பரராசசிங்கம் [இரத்தினசபாபதி அன் சன்ஸ்], திருமதி விமலாதேவி சிவபாலராஜா [ஆசிரியை, யா/புனித மரியாள் கல்லூரி], லைலாதேவி, இலங்கரட்ணா [I. W., R. D. Branch - கச்சேரி, மட்டக்களப்பு], சந்திரா, குணரட்ணா ஆகியோரின் அன்புத் தந்தையும், க. சி. இராஜேஸ்வரன் [Sathosa Printers, Colombo], கு. சிவபாலராஜா [P. H. I , கீரிமலை], திருமதி ப. இராஜலட்சுமி [நீர்ப்பாசனத் திணைக்களம்] ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி இராசா பவளம், திருமதி இராசையா மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கல்யாணி, மயூரன், வசீகரன், பரதன், சுஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் [14, சட்டநாதர் வீதி, நல்லூர்] நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
இ. பரராசசிங்கம்
[மகன்]

[21688]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09 07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org